ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1810/23 - 2013 මැයි 14 වැනි අඟහරුවාදා - 2013.05.14
*1810/23 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : உப/03/இஅத்/பொது/02.
காணி அமைச்சின் இல. : எல்/டீ/05/2009/டபிள்யூஎஸ்/63.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், தொழுவ பிரதேச செயலாளர் பிரிவில், கந்துகர பஹல கோரளையின் கம்பொலவத்த கிராம சேவகர் பிரிவில், கம்பொலைவத்த கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபரால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 320021 மற்றும் 2012.08.16 ஆந் திகதிய முதற்சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இல. 90 எனக் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் 0.0016 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கம்பொலவத்த எனும் காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:-

1. **துண்டு இல. 90**
காணியின் பெயர் : கம்பொலவத்த ; உரிமை கோருபவர் : கோரலை கெதர பொடிமெனிக்கே ; விஸ்தீரணம் : 0.0016 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு தொழுவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பீ. எம். பி. ஜீ. பி. வீ. பண்டார,
பிரதேச செயலாளர்,
தொழுவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தொழுவ,
2013.04.29.

05-804

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 4/7/45-11.
காணி அமைச்சின் குறிப்பு இல. : 03/ஜே/91/யூஏ/184.

காணி சுவீகரிப்பு சட்டத்தின் (அத்தியாயம் 460 ) 7 ஆம் பிரிவின் 2000 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 1151/28 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் *அதிவிஷேட வர்த்தமானியில்* பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்படி 2000.10.27 ஆந் திகதி நடாத்தப்பட்ட உரித்து தொடர்பிலான பரிசீலனையின்படி வெளியிடப்பட்ட சட்டத்தின் 10 (1) அ பிரிவு ஆரம்ப வரைபட இல. எப்.வீ.பீ. ப.508 இல் காணியின் உரிமை சரியாக நிரூபனமாக்கப் படாததாலும் காணியின் முதலாவது உரிமையாளர் மரணமடைந்த தாலும் சட்டத்தின் 10 (1) ஆ பிரிவின் கீழ் நீதிமன்ற உத்தரவிற்கு உட்படுத்தப்பட்ட பின்னும் காணி உரிமையாளருக்கு எதிர்பார்க்கப்பட்ட நட்ட ஈட்டுத்தொகை முறையாக கிடைக்கப் பெறாததாலும் பொருள் கோடல்நட்ட ஈட்டின் உரிமையாளரினால் செய்யப்பட்ட மேன்முறை யீட்டின்படி பொருள்கோடல் கட்டளைச் சட்ட 18 ஆம் பிரிவின் கீழ்

*காணிச் சுவீகரிப்பு சட்டத்தின் (அத்தியாயாம் 460) 9 ஆம் பிரிவின் உரித்து தொடர்பிலான பரிசீலனையை இரத்து செய்து சட்டத்தின் 7 ஆம் பிரிவின் அறிவித்தலை கீழ்வருமாறு மாற்றம் செய்வதனை இத்தால் அறியத்தருகிறேன்.*

*பதுளை மாட்டத்தில், பதுளை பிரதேச செயலகப் பிரிவில், இல. 10 பதுளை மத்தி (பதுளை மாநகர சபை எல்லைக்குள்) கெந்தலகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் ஆரம்ப வரைபட இல. ப. 508 மற்றும் 1999.10.27 ஆந் திகதிய வரைபடத்தில் மென்மேல் அடுக்கு செய்யப்பட்ட பதுளை சிரேஷ்ட அளவையாளர் அதிகாரியின் இல. ப.508 மற்றும் 2013.04.10 ஆந் திகதிய வரைபடத்தில் காட்டப்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் முழு அளவில் 0.1449 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :*

**திட்டமிடல் இல. மென்மேல் அடுக்கு ப/508**
**துண்டு இல.** *2*

*காணியின் பெயர் : பண்டிதகெதரவத்த மற்றும் ரதலவத்த வரிப்பண இல. 37, 39, 39/1, 39/2, 39/3, 39/4, 39/5, தபால் நிலைய வீதி; விபரம்: தோட்டம், நிரந்தர கட்டிடத்தின் பகுதி உள்ளது; உரிமை கோருபவர் : அரசு; விஸ்தீரணம் : 0.0228 ஹெக்டயார்.*

**திட்டமிடல் இல. மென்மேல் அடுக்கு ப/508**
**துண்டு இல.** *3*

*காணியின் பெயர் : பண்டிதகெதரவத்த மற்றும் ரதலவத்த வரிப்பண இல. 4யூ, தபால் நிலைய வீதி; விபரம்: தோட்டம், நிரந்தர கட்டிடத்தின் பகுதி உள்ளது; உரிமை கோருபவர் : அரசு; விஸ்தீரணம் : 0.1221 ஹெக்டயார்.*

*மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு பதுளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

காமினி மகிந்தபால ஜோபியஸ்,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பதுளை,
*2013.05.03.*

05-805